படுகின்ற நிலையில் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தக்க விளம்பரம் கொடுக்க முன் வருவார்களா ? சில சமயங்களில் பர்மிட் வைத்துக் கொண்டிருந்தாலும் பிடித்துக் கொள்ளுகிறார்கள். இந்த நிலைமையை எல்லாம் போக்கும் வகையில் விளம்பரம் செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் ஏற்கனவே இதைப் பற்றி எல்லா விவரங்களும் பொது மக்களுக்குத் தெரியும்படி விளம்பரப்படுத்தியிருக்கிறது. தங்களுடைய சொந்த உபயோகத்திற்குக் கொண்டு வருகின்றவர்கள் பர்மிட் வாங்கிக் கொண்டு தாராளமாகக் கொண்டு வரலாம். இது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இந்த விதிமுறைகளை அடிக்கடி மாற்றுவதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை. பொதுவாக, பத்து கிலோ கிராமுக்குக் கீழ் யார் வேண்டுமானாலும் அரிசி எடுத்துக் கொண்டு வரலாம். யாரும் பிடிக்கமாட்டார்கள். அதற்கு மேல் எடுத்து வரவேண்டுமென்றால் அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்று எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஏழைகள் நிறையப் பேர் சென்னையில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பத்து படி, பதினைந்து படி என்று அரிசி எடுத்து வரத் தடை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதினைந்து படி வரை அவர்கள் அரிசி எடுத்துவர அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அங்குள்ள வட்டாட்சித் தலைவரிடம் பெர்மிட் வாங்கி எடுத்து வந்தால் பிடிக்க மாட்டார்கள். அதுவே அதற்குப் பாதுகாப்பாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது பத்து கிலோ வரையில் கொண்டு வரலாம் என்று சொல்கிறார்கள். பத்து கிலோ என்பது மிகவும் குறைவானதாகும். ஆகவே 15 கிலோ என்று ஆக்கினால் கிட்டதட்ட பத்துபடி வரும். அதையாவது அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பத்து கிலோவிற்குக் கீழே கொண்டு வரலாம் என்று சொன்னேன். இதுவே பல முறை சென்றால் அதிகமாகிவிடும். 15 என்று ஆக்கினால் அதை 20 என்று ஆக்க வேண்டும் என்று சொல்வார்கள். இருப்பதே போதும் என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : எல்லையோரப் பகுதிகளில் லாரிகளில், வண்டிகளில் போவதைத் தடுக்க முடிகிறது. குறுக்கு வழியே கால்நடைகளின் மீது மூட்டைக் கணக்கில் அரிசி வெளி மாநிலங்களுக்கு கடத்திச் செல்கிறார்கள். அது சம்பந்தமாக ஏதாவது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு நிறைய அனுப்பப்பட்டிருக்கிறதா ?

1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது போன்று புகார்கள் வந்து நிறைய பிடித்து இருக்கிறோம். தலையில் தூக்கிச் செல்கிறார்கள். கழுதைகளின் மேல் ஏற்றிச் செல்கிறார்கள். குறுக்கு பாதையில் வழி கடத்திச் செல்கிறார்கள். இவைகளை எல்லாம் பிடிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் போலீஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். கழுதைகளின் மேல் ஏற்றி அனுப்புகிறார்கள். ஆள் இல்லாமல் 100, 200 கழுதைகள் காடுகள் வழி போய்க் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு நல்ல பழக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள், கேரளா விற்குப் போவதற்கு. அக் கழுதைகளைப் பிடித்து அவைகளைக் கொண்டு வந்து பட்டியில் அடைத்து ஏலம் போட்டிருக்கிறோம். விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : அம்பாசமுத்திரம், செங்கோட்டை, தென்காசி போன்ற மூன்று தாலுகாக்களில் செக்போஸ்ட்ஸ் இப்போது போடப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக மாஞ்சோலைப் பகுதிகளில், மலைப் பகுதிகளில் வசிக்கும் ஏழைத் தொழிலாள மக்களுக்கு அங்கிருந்து உணவு தானியங்கள் கொண்டு போவதற்கு பல சிரமங்கள் இருந்து வருகின்றன. ஆகவே அவர்களுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்கக் கூடிய வகையில் கலெக்டருக்கு ஏதாவது உத்தரவு பிறப்பித்தால் நன்மையாக இருக்கும். அதை அரசு உடனடியாகக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அந்தப் பகுதியில் செக் போஸ்ட்ஸ் போடப்பட்டிருப்பது உண்மைதான். போட்டிருக்கிறோம். அதிகக் கள்ளக் கடத்தல் ஆகியிருக்கிறது என்ற தகவல் வந்ததால் எல்லையோரம் முழுவதும் அரசாங்கக் கடைகளை வைத்து அரிசி எவ்வளவு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டை விதித்து அதிகமாகப் போக முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அப்படி எடுத்துச் சென்று பழக்கப்பட்டவர்கள் இப்படிக் கட்டுப்பாடு விதிக்கும் போது கஷ்டப் படுகிறார்கள். அப்படி எடுத்துச் சென்றவர்கள் எடுத்துச் செல்லாமல் இருப்பதற்கு வழி செய்கிறோம். அதல்லாமல் யாவரையும் கொடுமைப் படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கழுதைகள் பிடிபட்டதாகச் சொல்கிறார்கள். அப்படி எவ்வளவு கழுதைகள் பிடிபட்டன ? எவ்வளவு நாட்கள் பட்டியில் அடைத்து வைக்கப் பட்டு பின்னர் ஏலம் போடப்பட்டது ? அதனால் எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்ற தகவல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதை பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, almost all the Southern States i.e., Madras, Andhra and Mysore have become self-sufficient in respect of paddy and rice production. May I know from the Hon. Minister for Revenue whether he will consider removing the ban on inter-state movement of rice and constitute a single unit ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I hope, Sir, the Hon. Member will not forget that there is a great syphon in Kerala.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கழுதைகள் அரிசி ஏற்றிச் சென்றதைப் பிடித்துக் கொண்டு வந்து ஏலம் போட்டதாகச் சொன்னார்கள். இந்தியன் பீனல் கோட் சட்டப்படி மென்ஸ்ரியா, க்ரிமினல் இன்டன்ஷன் இருந்தால்தான், குற்றம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தால்தான் தண்டிக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படியிருக்கும்போது கழுதைகள் அவைகளை சுமந்து செல்கின்றன என்றால், அவைகள் மீது குற்றஞ் சாட்டுவது என்றால் அவைகளின் மீது க்ரிமினல் இன்டென்ஷன் அட்ரிப்யூட் செய்வது நியாயந்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : வழக்கறிஞர் அவர்களது வாதத்தை கழுதைகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டாம். நாட்டு மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: இந்தக் கள்ளக் கடத்தலில் கழுதைகள் ஈடு பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதைக் கழுதைகள் தாமே கொண்டு போவதில்லை. அந்தக் கழுதைகளின் மேல் ஏற்றி அனுப்புகிற மனிதர்கள் பிடிபட்டார்களா ? அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சில பேர்கள் அப்படி கிடைத் திருக்கிறார்கள். அவர்கள்மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கழுதைகள் மேல் ஏற்றிவிட்டு காடுகளில் யாருக்கும் தெரியாமல் நடந்து செல் கிறார்கள். 100, 200 என்று கழுதைகள் செல்வதைப் பிடிக்க வேண்டி யிருக்கிறது. பயங்கரமான யானைகள் நிறைந்த காடுகளில் பிடிப்பது கூட சில சமயங்களில் சிரமமாகயிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கழுதைகள் பிடிபட்டு கோர்ட்டில் நிறுத்தப்பட்டால் அதற்காக வாதாட ஏதாவது வக்கீல்களை இந்த அரசாங்கம் நியமிக்கிறதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : யாராவது வழக்கறிஞர்கள் அப்படி வருவார்களேயானால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. கே. எ. வகாப் : தமிழ்நாடு, கேரளா எல்லையோரங்களில் இப்படி இப்போது கண்காணிப்பு அதிகமாக இருப்பதன் காரணமாக தமிழ் நாட்டின் எல்லையோரங்களில் இருக்கிற மக்களுக்கு அரிசி அதிகம் கிடைக் காத ஒரு சூழ்நிலை இருப்பதாக அங்கிருந்து புகார்கள் வந்துள்ளன. ஆகவே அங்கு அதன் விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே அதைக் கட்டுப்படுத்த எல்லையோரப் பகுதிகளில் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி விலையைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தமிழ்நாடு எல்லையோரத்தில் உள்ள ஐந்து மைல்களுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அனை வருக்கும் ரேஷன் கடைகளைத் துவங்கி அரிசி கொடுக்க வேண்டுமென்று

1972 மார்ச் 30]

விலையை அந்தந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் அவ்வப்போது நிர்ணயிக்கும்படி புதிதாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எனவே விலை அதிகம் செல்லும் என்று பயப்படத் தேவையில்லை. வியாபாரி களின் லாபம் போக என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று கட்டுப் படுத்த அதிகாரம் தந்திருக்கிறோம்.

சிறிய கார்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

* 801 வினா : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு கார் தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் ஏற்படுத்த முயற்சிகள் எவையேனும் அரசால் மேற்கொள்ளப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டப்பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த விவர அறிக்கைப்படி தமிழ்நாட்டில் ஆவடியில் ஒரு சிறிய கார் தொழிற்சாலை துவங்குவதற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தொழிற்சாலை துவங்குவதற்கு உரிய மொத்த மூலதனம் எவ்வளவு? எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் ப்ரோடோடைப் கார் செய்த பின்னர்தான் சொல்ல முடியும். எவ்வளவு முதல் தேவை என்று கணக்குச் சொல்ல முடியாது.

திரு சு. துரைசாமி : மாதிரி கார் அமைப்பதற்கு முயற்சிகிறார் கள். கோவை டெக்ஸ்டூல் கம்பனியால் ஐந்தாண்டுகளுக்கு முன்பு மாதிரிக் கார் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதையே ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு இந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு விரை வாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மாதிரிக் கார், ப்ரோட்டோ டைப் கார் செய்வதற்கு இரண்டு லட்சம் ரூபாய் நிதி உதவி கேட்டிருக்கிறார்கள். இந்த டெக்ஸ்டூல் கம்பனி, இப்போது நம் நிர்வாகத்தில் இருப்பதால் அந்தக் கம்பெனி மூலம் உதவி செய்யலாமா என்பதைப் பற்றி பரிசீலித்து வருகிறோம்.

திரு. கோவை செழியன் : கார் என்றால் முன்பெல்லாம் அது ஒரு லக்ஷுரிப் பொருளாக இருந்தது. ஆனால் இப்போது அது வாழ்க்கை யில் இன்றியமையாத ஒரு பொருளாக ஆகிவிட்டது. ஆனால் கார் வாங்கலாம் என்றால் 30,000 ரூபாய்க்குப் பக்கம் ஆகிவிடுகிறது. எனவே காரின் அமைப்புகளை தரமானதாகவும்—ஆனால் லக்சுரியாகயில்லாமல் —நமது தேவைகளை அடிப்படையாக வைத்து அதன் செலவைக் குறைத்து 10,000 ரூபாய்க்குக் கீழ் வருகிற மாதிரி ஹார்ஸ் பவரைக் குறைத்து, பெட்ரோல் கன்ஸம்ஷன் குறைவாக இருக்கும் வகையில் அமைக்குமாறு அரசாங்கம் ஆலோசனை கூறுமா ?

---

* 117-118ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கார் உற்பத்தி செய்கிற தொழிற் சாலை சொந்தக்காரர்கள் காரோடு காம்பொணண்ட்ஸ், காருக்குப் போடும் வரி இவற்றைக் குறைத்தாலே விலை குறைந்துவிடும் என்று வாதாடு கிறார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் : இந்தச் சிறிய கார் தயார் செய்வதில் இந்தக் காரில் எவ்வளவு பேர்கள் பயணம் செய்யலாம் ? சாதாரண மக்கள் பயன்படுத்தும் வகையில் இதன் விலை அடக்கமாக இருக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படித்தான் எதிர்பார்க்கப் படுகிறது. எவ்வளவு பேர்கள் என்பது கார் வந்ததற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. செ. கந்தப்பன் : ப்ரெஞ்ச் நாட்டில் ரெனல்ட் கார் பொதுத் துறையில் உற்பத்தி செய்ய அரசாங்கம் ஒத்துக்கொண்டு விட்டதாக இன்று செய்தி ஏடுகளில் தகவல் காணப்படுகிறது. இந்தப் பின்னணியில் நம் தமிழகத்திலும் ஒரு சிறிய கார் தொழிற்சாலை நிறுவுவதற்கு வாய்ப்புக்கூறுகள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறைந்த விலையில் சிறிய கார் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டம். அதற்காக உலகத்திலுள்ள பல நாடுகளிலிருந்து அவர்கள் ஆலோசனை கேட்டிருந்தார்கள். இன்று ப்ரெஞ்ச் நாட்டு கருத்தை ஏற்றுக்கொண் டுள்ளதாக ஒரு குறிப்பு பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அரசுக்கு அதைப் பற்றித் தகவல் இல்லை. நமக்குக் கொடுத்திருக்கக்கூடிய அனுமதி பொறுத்த அளவிற்கு நம் சொந்தத்தில் டெக்னிக்கல் கொலா பரேஷன் இல்லாது உற்பத்தி செய்வதற்கு இயலுமானால் என்று சொல் லித்தான் இந்த அனுமதியைத் தந்திருக்கிறார்கள். இந்த முயற்சி வெற்றியடையுமானால் விலையில் போட்டியோடு விற்பதற்கு வாய்ப்பிருக்கும்.

THIRU K. M. SUBRAMANIAM : Does this Government consider that in the most poor country like India with 52 crores (A VOICE : 55 crores) of people—yes, 55 crores subject to correction—whether the manufacture of cars is a priority industry and whether we should enter with our limited resources into that, whether we can afford manufacturing cars however small they be even with Rs. 10,000 a car it would be impossible for our poor people to invest and in view of all this, does this Government think about manufacture of small cars that it is necessary ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்றைய உலக நிலையில் கார் நம் நாட்டுக்குத் தேவை இல்லை என்று ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. இப்போதுகூட கார் வேண்டுமென்று பணம் கட்டியவர்கள் காத்திருக் கிறார்கள். அதிகமான விலையில் விற்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அது ஒன்றே போதும் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கார் தேவைப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, வளர்ந்து வருகிற பொருளாதாரத்தில் கார்களின் மார்கெட்டுகள் இப்போது அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசாங்கம் ஏதாவது மேல்நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, பொதுத்துறையில் லாபம் ஈட்டும் கார் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த விரைவில் முயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை மத்திய அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஆட்டோ மொபைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் என்ற முறையில் மிகுந்த அளவுக்கு பல ஆண்டுகளாகத் தொழில் வளர்ச்சி மிகுந்து இருக்கிற காரணத்தால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அந்தப் புதிய சிறிய கார் தொழிற்சாலைத் திட்டத்தை பொதுத்துறையில் நம்முடைய மாநிலத்திற்கு தருவது தான் நியாயம் என்று எடுத்துக் கூறியிருக்கிறோம். அப்படித் தருவார்களானால், நம்முடைய அரசாங்கம் அதைப் பங்கேற்று நடத்தத் தயார் என்றும் சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, அந்த சிறிய கார் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நேரத்தில் கோவை அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு போன்ற அறிவாளிகளின், தொழில் மேதைகளின் அறிவுத் திறன் பயன்படுத்திக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாருடைய அறிவைப் பயன்படுத்துவதற்கும் தடையில்லை.

Neyveli Lignite for Salem Steel Plant

*802 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to use Neyveli Lignite for Salem Steel Plant ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த நிலக்கரியை கோக்காக மாற்றி இரும்பு செய்வதை விட மின்சாரத்தைப் பயன்படுத்தி உருக்காக்கினால், அந்த உருக்கு எந்த அளவுக்கு சிக்கனமான விலையில் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?